T-UN-911

உ

பரமபதிதுணை.

அண்ணாமலை ரெட்டியார் பாடிய

கழுகுமலை
சுப்பிரமணியர்
காவடிச் சிந்து.

மதுரை—புக்ஷாப்
பி. நா.
சிதம்பர முதலியார் & பிரதர்ஸ்
அவர்களால்
திருமங்கலம் ஸ்ரீகிருஷ்ணவிலாஸம் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

உ

வேலுமயிலந்துணை.

கழுகுமலை
சுப்பிரமணியர் காவடிச்சிந்து.

விநாயகர் துதி.

திருவுற்றிலகுகங்கை வரையிற்புகழ்மிகுந்த
    திகழத்தின முறைந்த   வாசனை   மிகு
    மகிமைச் சுகிர்ததொண்டர்   நேசனை   பல

தீயபாதககாரராகிய சூரர்யாவரு மாளவேசெய்து
    சிகரக் கிரிபிளந்த   வேலனை   யுமை
    தகரக் குழல்கொள்வஞ்சி   பாலனை

மருவுற்றிணர்விரிந்து மதுபக்குலமுழங்க
    மதுமொய்த் திழிகடம்ப   வாரனை   விக
    சிதசித்ர சிகியுந்து   வீரனை   யெழில்

மாகநாககு மாரியாகிய மாதினோடுகி ராதநாயகி
    மருவப் புழகரும்பு   தோளனை   யெனை
    யருமைப் பணிகொளுந்த   யாளனை

தெரிதற் கரியமந்தி ரமதைத் தனதுதந்தை
    செவியுட்புக மொழிந்த   வாயனை   யிள
    ரவியிற் கதிர்சிறந்த   காயனை   யகன்

றேவநாடுகெ டாதுநீடிய சேனைகாவல னாகவேவரு
    திறலுற்ற சிவகந்த   நாதனை   விரி
    மறையத் தொளிருகின்ற   பாதனை

மருளற்றிட நினைந்து மனதிற் கனிசிறந்து
    மதுரக் கனிவுவந்து   கூடவே   பல
    விதமுற் றிலகுசிந்து   பாடவே   யலை

வாரிநீரினை வாரிமேல்வரு மாரிநேர்தரு மாமதாசல
    வதனைப் பன்னிரண்டு   தாளையே   நமக்
    குதவப் பணிவமிர்த   வேளையே.   1

முருகன் துதி.

சீர்வளர் பசுந்தோகை   மயிலான்   வள்ளி
    செவ்விதழ லாதினிய ஒயிலான்

வேர்வளர் தடங்கையுறு மயிலான் விமல
பொன்னடியை இன்னலற வுன்னுதல் செய்வாமே

குஞ்சரவனங்காவல் வீடா தயடி
கொஞ்சிமரு வுஞ்சாச ரஞ்சிதவி சேடா

பைஞ்சர வனங்காவல் வீடா வளரும்
பாலனென மாலையொடு காலமினை வாமே

வல்லவுணர் வழியாதும்விட்டு வெருள
வன்சமர்செய் கந்தனிடம் வழியடிமை பட்டு

ந[illegible]வுணர் விழியாது மட்டு மிஞ்சு
ஞானபர மானந்த மோனமடைவாமே

ஒருதங்க மாதங்க முகத்தான் மகிழ்
உத்தம கனிட்டனென வுற்றிடும கத்தான்

வருதந்த மாதங்க முகத்தான் எவரும்
வாழ்த்துக நாயகனை யேத்துதல் செய்வாமே.

கழுகுமலை நகர்வளம்.

தெள்ளுதமி ழுக்குதவுசீலன் தமிழ்
செப்பணு மலைக்குமனுகூலன் வளர்
செழியப்புகழ்விளைத்த கழுகுமலைவளத்தைத்
தேனே சொல்வேனே

வெள்ளிமலை யொத்தபலமேடை முடி
மீதினிலே கட்டுகொடி யாடை யந்த
வெய்யவனடத்திவரு துய்யவிரதப்பரியும்
விலகும் படி யிலகும்

வீதிதொரு மாதிமுறை வேதம் சிவ
வேதியர்க ளோதுசாமகீதம் அதை
மின்னுமனக்காவதனிற் றுன்னுமடப்பூவையுடன்
விள்ளும் கிள்ளைப்புள்ளும்

சீதளமுகிற் குவமைகூறும் நின்ற
சித்திரங்கள் சிந்துமதத்தாறும் உயிர்
சித்திரகிர்த்தமின்னர் பற்றிபூசுங்குங்குமச்
சேறுங் காதநாறும்

மித்தகித்த முங்கணவரோடுங் கூடி
நேசத்தாற் பிணங்கிமனம் வாடுங் கரு
நீலவிழியார்வெருத்த கோலமணிமாலைரத்ன
நெருங்கு மெத்தமருங்கும்

கத்துகட லொத்தகடை வீதி முன்பு
கட்டுதாளப்பந்தலின் சோதி யெங்கும்
காட்டுவதா மீரிரண்டு கோட்டுமத யானையிற்பல
களிறும் திறம் வெளிறும்

முத்தமிழ்சேர் வித்வஜனக் கூட்டம் கலை
முற்றிலுமு ணர்ந்திடுங்கொண்டாட்டம் நெஞ்சில்
முன்னுகின்ற போதுதொறுந் தென்மலையின் மேவுகுறு
முனிக்கும் அச்சஞ் சனிக்கும்

எத்திசையும் போற்றுமம ரூரும் அதில்
இந்திரன் கொலுவிருக்குஞ் சீரும் மெச்ச
மிங்கநக ரந்தனை யடைந்தவர்க்கதுவும் வெறுத்
திருக்கும் அருவருக்கும்

துள்ளியெழு வெள்ளியலை மடங்கும் படி
சுற்றிலும் விளைந்தவகழ்க் கிடங்கும் பல
சொர்ணமலை போன்மதிலு மின்னுவதி னலேபுகழ்
தோன்றும் லோக மூன்றும்

கள்ளவிழ் கடப்பமலர் வாகன் குறக்
கன்னியை விரும்பிடும் விநோதன் வளர்
கழுகுமலை நகரின் வளமையென் னாவிலடங்
காதே மடமாதே.

கோயில் வளம்.

சென்னி குளநகர் வாசன் தமிழ்
தேறும் அண்ணாமலை தாசன் செப்புஞ்
செகமெச்சிய மதுரக்கவி யதனைப்புய வரையிற்புனை
தீரன் அயில் வீரன்

வன்னமயில் முருகேசன் குற
வள்ளிபதமபணி நேசன் உயிரை
வரமேதரு கழுகாசல பதிகோயிலின் வளநான்மற
வாதே சொல்வேன்மாதே

கோபுரத்துத் தங்கத்தூவி தேவர்
கோபுரத்துக்கப்பால் மேவி கண்கள்
கூசப்பிர காசத்தொளி மாசற்றுவி லாசத்தொடு
குலவும் புவி பலவும்

நூபுரத்தத்தொனி வெடிக்கும் பக
நுண்ணிடைமாதர்கள் நடிக்கும் அங்கே
நுழைவாரிடு முழவோசைகள் திசைமாசுண மடியோவென
நோக்கும்படி தாக்கும்

சந்நிதியிற்றுஜஸ் தம்பம் விண்ணிற்
றுவிவருகின்ற கும்பம் எனுஞ்
சலராசியை வடிவார்பல கொடியீடிய முடிமீதிலே
தாங்கும் உயர்ந் தோங்கும்

உ[illegible]தமாகிய விஞ்சி பொன்னாட்
டும்பர் நகருக்கு மிஞ்சி மிக
வுயர்வானது பெறலாமதில் அதிசீதள புயல்சாலவி
முறங்கும் மின்னிக் கறங்கும்

அருணகிரிநாவிற் பழக்கம் தரு
மந்தத்திருப்புகழ் முழக்கம் பல
வடியார்கண மொழிபோதினி லமராபதியிமையோர்செவி
யடைக்கும் அண்டம் உடைக்கும்

கருணைமுருகனைப் போற்றித் தங்கக்
காவடிதோளின் மேலேற்றிக் கொழுங்
கனலேறிய மெழுகாய்வரு பவரோவரு மிகவேகதி
காண்பார் இன்பம் பூண்பார். 4

கழுகுமலை வளம்.

பொன்னுலவு சென்னிகுள நன்னகரண்ணாமலைதன்
புந்தியின் மகிழ்ந்துநித்தம் நின்றவன் முந்தி
வெந்திறை யரக்கர்களை வென்றவன் மயில்

போலவேனலின் மீதுலாவுகி ராதமாதமு னேசியேயடி
பூவையேயுன துதஞ்ச மென்றவன் அவ
ளியுமா வினையுமென்று நின்றவன்

மின்னுலவு சொன்னமுடி சென்னியணி விண்ணவர்தே
வேந்திரனுஞ் சித்தர்களும் துன்னியே கதி
வேண்டியே யகத்திலன்பு மன்னியே பணி

வேலவன்திரு பாகரன்குகன் மேவிநின்கழு காசலந்தனில்
மிஞ்சியே வளங்களைகா ணுன்னியே சொல்ல
ரஞ்சிதமாய்க் கேளடினற் பன்னியே

மூசுவண்டு வாசமுண்டு காவின்மொண்டு தேனையுண்டு
மோகன முகாரிராகம் பாடுமே மைய
லாகவே பேடையுடனே நாடுமே யலே

மோதுவாரிதி நீரை வாரிவின் மீதுலாவிய சீதளாகர
முகில்பெருஞ்சிகரமுற்று மூடுமே கண்டு
மயிலினஞ் சிறகைவிரித் தாடுமே

தேசுகொண்ட பாரதந்த வீரரும்பி ராசியண்டர்
தேவதாரு வைக்கரத்தாற் பிடிக்குமே சற்று
மேவியே கிளையைவளைத் தொடிக்குமே யொளிர்

சேயசந்திர னோடுரிஞ்சுப லாமரங்களி வேநெருங்கிய
தீங்கனி மதுரசத்தை வடிக்குமே மந்தி
பாங்கினின் றதனையள்ளிக் குடிக்குமே

அந்தர முருவிளர்ந் திந்திர னுலகுகடந்
தப்புரம்போய் நின்றசையுஞ் சந்தன மரங்
தப்பித மிலாதுகையால் வந்தன மெங்க

ளாறுமாமுக நாதனுக்கிடு மாரிபோலவி சாலமுற்றகண்
டத்தனையு நின்றுதலை சாய்க்குமே யண்டப்
பித்திகை தனிலுஞ் சென்று தேய்க்குமே

சுந்தரத்தொ ருங்கடந்து கந்தரம் பயந்தொதுங்கக்
கர்ச்சனை புரியுந்திரற் சிங்கமே நெஞ்சி
லச்சமுற விண்ணுறைமா தங்கமே தடங்

காவிலேசில தாவிலேவளர் மாவிருனடி வேகிருதர்கள்
கார்முக மெய்யுங்கணைக ளேறுமே யதில்
வார்மதுவால் வாரியுவர் மாறுமே

காலவடி வேனெடிய வாள்கொடிய நாகமுமில்
காரிபினை வாரிகணை பானலே யன்ன
கூர்நயன வேடமின்னா ரேனலே காக்குங்

காலைமேலெரி வோதுவார்கவ னோடுமோமணி தேசுவீசவே
கதிரவன் றனதுமுகஞ் சுழிக்குமே யவன்
குதிரையுங் கண்ணைச் சுருக்கி விழிக்குமே

ஓலமலி கோலநில வேலைசூல ஞாலமீதி
ஆற்றவரின் பத்துடனே வானமே செல்ல
வைத்தபல சித்திரசோ பானமே யென்ன

ஓங்குகோங்ககி னுங்கிலாங்கவி பாங்குநீங்கரு வேங்கைபூங்கழை
யொன்றோடொன்று வம்புகொண்டு மீளுமே கோள்கள்
சென்றுசென்று நின்றுநின்று மீளுமே. 5

வாவி வளம்.

புள்ளிக்கலாபமயில்பாகன் சத்தி
புதல்வனான கனயோகன் மலை
போலத் தான்றிரண்டு கோலப்பன்னிரண்டு வாகன் நல்விவேகன்

வள்ளிக்கிசைந்த முருகேசன் அண்ணா
மலைக்கவிராஜன் மகிழ்நேசன் என்றும
வாழுங்கழுகுமலை வாவிவளஞ்சொல்வேன் மாதே கேளிப்போதே

[illegible]ள்ளைநாரைகொத்தும் வேளை தப்பி
மேற்கொண் டெழுந்துகினவாளை கதி
மீறிப்பாயுந் தோறுங்கிரிச் சாயும்தென்னம்பாளை யுடன்றுறை

தெள்ளும்பிள்ளையவினப் பேடும் இளபு
சேவலான துவு மூடும் பின்பு
தேசமலர்த்தவிசிற் சாமத்தினில்நாடும் உறவாடும்

மின்னிக்குலவிமதி மானும் வரி
வெள்ளைப்பணிலராசிதானும் மட
மின்னார்விழிகளென்ன மனனுகொண்டைமுத்த மீனுமடமானும்

வன்னத்தாமரையைக்கண்டு வாயின்
மதுராகம்பாடிக்கொண்டு மதி
மயங்கிபேட்டினுடன் முயங்கியேகிடக்கு வண்டு கள்ளையுண்டு

அந்தரத்துப் பெண்கள்நாடி யங்கு
அன்பாகவே விளையாடி செல்லு
மன்னலார்நடக்கு நன்னடைக்குறுகி யன்னஞ்சொல்லிப்பின்னும்

மந்தமேதினியுள்ளே யெட்டும் சினை
வருளுமெழுந்துமே முட்டும் போது
மடிசுரந்துகன்று தனைநினைந்துகண்ட மட்டும் பாலைக்கொட்டும். 6

துதி வேறு.

மரகதவிகசித வொளிதவ ழிருசிறை
மருவிய மயின்மிசை யனுதின முறைதரு வாசன் பவநாசன்

குரகதசுரமணி வளிரத நடவிய
குவலய சரதர னெனுமத னனுமகிழ் கோலன் பரை பாலன்

பரிபுர வணிகல கலவென வொலிபுரி
பரிதி யுதயமதி லவிழ்மறை மலர்நிகர் பாகன் குகநாதன்

திரிபுர மதையொரு நொடிதனி லெரிகொடு
சிறைவற நகைபுரி சிவன்மன மகிழுப தேசன் முருகேசன்

பதுமநி தியிறெடு பணிலநி தியுமெழில்
பரவிய சுரவியு முருகுசுர புரமகிழ் பாகன்கனயோகன்

சததள நளிநக விசும்லைச வதியொரு
சதமுக விதிசிலைற பதிலுற நிறுவுவி சாகன்றடவாகன்

குரைதிரை வரைநிலைற புரகர வுலவிய
குரைவயி னடுவிரை நிருதரை முடுகிய சோபன் கமழ்நீபன்

பரைசிவ பகவதி புதவிய சரவண
பவனறுமுககுகன் மிசைபது ரிதகவி பாடுஞ் சுகநாடும். 7

துதி வேறு.

பவனகிரி யதருட்டானே மன்னுவானே பல
பாழிதேயலே யாமலின்புற நாளுமேயருள் மேவுகண்கொடு
பாராய் இன்னல் தீராய்

அவுணப்படையை முடித்தோனே புண்ணியவானே கதி
யாருமேதரு வாருமிங்கிலே யாதலாலருள் வாவினம்புரி
யாதே பண்ணுஞ் சூதே

விரகப்பெரு விதனத்தாலே மண்ணின்மேலே மனம்
வீணிலேயுழ லாதுதந்தவி சாகனேபுரி யும் வஞ்சமென்
மீதே யெண்ணிடாதே

நரகச்சமன் வரும்போதே பின்னில்லாதே எந்த
நாளுமேமற வாதுநின்சிறு பாதமாகிய சீதபங்கய
நானே உன்னி னேனே

நிமலப் பெருமிதச்செவ் வேளே கன்னல்வேளே தொடு
நீடுபாணம் தான்மருண்டிடைவாடுமாதரி டக்கெடாவகை
நீயே யெண்ணு வாயே

குமரிக் கெதிபாற கானே நண்ணினனே யிதழ்
கோதிலாத தபோபலம்பெறு நீதாபாலக லாதுரைந்தருள்
கோவேயென்னுள் வாவே

கடல்சுற்றிய வுலகப்பாலே மின்னல்போலே வரு
காயமாகிய தீயவன்பிணி மேவியேதவி யாமலன்பொடு
காவே யென்னை யாவே

இடமற்றவ னிடச்சேயே யன்னை நீயே உனை
சேவையேசெயு ஞானபண்டிதர் நாவினாடினி தாவிரந்திடுந்
தேனே பொன்னனே.

துதிவேறு.

செந்தின்மா நகர்வாழ் கந்தநாதனிரு
செய்யப்பாத கஞ்சமே நமக்
குய்யமேவு தஞ்சமே யின்று
செப்புவது கொஞ்சமே கேட்கத்
தீயபாதகவி ரோதமாய்விட்டுத்
திரும்புவாயே நெஞ்சமே

பஞ்சபாசமதை எந்தவேளையினும்
பார்க்கும்போது தொல்லையே யல்
லார்க்குமாவ தில்லையே யொரு
பாரமேரு வில்லையே கையிற்
பற்றுநாதன் மாது பெற்றநீதன்மீது
பனுவல்சூடுவல்லையே

மங்கைமார்களிரு துங்கமானபெரு
வாரணக்கொள் கும்பமே முகம்
பூரணசந்திர விம்பமே பட
மாகணங்கொள் தம்பமே துடை
மாரவேளரசு மண்டபத்தருகில்
வைத்த ரண்டுகம்பமே

செங்கைசூரியோத யங்குலாவமலர்
சீதபத்மதாளமே வாயி
லோதுசொற்கள்குளமே யிதழ்
திவ்யபொற் பவளமே யென்று
சிந்தித்தாற்குமரன் கந்தப்பாதமலர்
சேர்வதெவ்வாறுளமே

வன்னமானவிழி மின்னவேநடையில்
வக்ரதந்தசங்கமே கொண்ட
வுக்ரதுங்கசிங்கமே யென்ன
மறலிதூதர் பொங்கமே யுற்று
வந்தவேளைநெஞ்ச கந்தவேளைநினை
மருவுறுது பங்கமே

சென்னிமாநக ரண்ணுமலைக்கவிஞன்
தேசமெங்குமிசையே பெறப்
பேசுதந்தயிசையே சற்றுந்
தீர்ந்திடாத நசையே வைத்து
சேவலாளிபத மாலோபேணி
தினமுநாறுவிசையே.

சுரம்போக்கு நற்றுயிரங்கல்.

பாதிராத்திரிவேளையில்வீட்டுப்
பக்கத்தில்வந்மேவிப் பஞ்ச
பாதகனொருபாவி சிறு
பாவையைமெள்ளக் கூவிக் கையைப்
பற்றிக்கட்டிக்கொண் டேகினன்பதை
பதைக்குதேயெந்தனுவி

சோதனைப் பிரகாரமாயென்னைத்
தொடர்ந்ததே பெருந்தோஷம் எவர்
சூதினால்வந்த மோசம் இனித்
தொலையுமோபிள்ளைப் பாசம் இதைச்
சுற்றத்தாறறிந் தாலெனக்குமுன்
சொல்வாரோ பரிகாசம்

தேனிலங்கிய காவனந்திகழ்
சென்னிமாநகர் வாசன் துதி
செய்யண்ணாமலைதாசன் செப்புஞ்
செந்தமிழ்க்கரு ணேசன் நாளுஞ்
சிந்தனைசெய்யுந் தொண்டர்தீவினை
தீர்த்திடுமுருகேசன்

நானிலம்புகழ் கழுகுமாமலை
நாயகன் பாண்டிநாட்டில் நெஞ்சில்
நாணம்விட்டுதன் பாட்டில் வெப்பம்
நண்ணியபாலைக் காட்டில் மகள்
நடக்கவேண்டிமுன்னடக்கமாத்தெய்வம்
லபித்ததோ மண்டையோட்டில்

மையல்கொண்டொரு தையல்பின்செல
வயதுமீறினமாதோ யிந்த
மார்க்கந்தோன்றினதேதோ சென்ம
வாசனைப்பலனீதோ ஐயோ
மாதம்பத்துஞ் சுமந்துபெற்றவள்
வயிறுந்தானெரியாதோ

செய்யபஞ்சணை யும்பொறுது
சிவந்துகொப்பள மாகும் நெரிஞ்
சிப்பளமென்று நோகும் அவள்
சீரடிரண்டும் படி
தீயுங்கானலிற் காயும்வேனிலாந்
தீயிலெப்படிப் போகும்

தேடினுங்கிடையாததாகிய
திரவியற் கனுகூலம் போலே
ஜெனித்தபெண்ணுக்குச் சீலம் வேறே
திரும்பினதென்ன காலம் வயது
திரண்டிடாமுன்னம் மிரண்டிடற்கெவன்
செய்தானோ விந்த்ரஜாலம்
காடுசேர்கையிற் கரடிவேங்கைகள்
காட்டுமேயாரவாரம் அதைக்
காதிற்கேட்க விசாரம் வைத்துக்
கலங்குவாளந்தநேரம் என்றன்
காதலிதன்னை யாதரித்துயர்
காப்பதுவேலவன் பாரம். 10

தலைவி யிறங்கல்

நேமமாய்ப்பணி யண்ணுமலைக்குதவுநீதனைக்
கழுகுமலைநாதனை நெஞ்சில்
நினைக்கநினைக்கமீறி யெனைக்கொல்லுதேமனவேதனை

கோமளக்கடலி லேமித்திரைக் கூட்டமே
அங்கமிலான்போ ராட்டமே நாதன்
கோரமேவிளைந்தாற் றீருமோவெனக்கு வாட்டமே

வெள்ளத்திரையின்மேலே துள்ளித்திரியுஞ்சுறு மீனமே
யினியுமுண்டோமானமே மன
தேக்கங்கொண்டதனு லேற்குதில்லையன்ன பானமே

அள்ளற்கழிகரையுண் மெல்லக்குலாவிவரு மாமையே
கொடிமனத் தீமையே நாளு
மதிகரித்திடலா லவமதிக்குதிந்தச் சீமையே

பொங்குமேதுலர்க ளெங்கும்பரிமளிக்கும் புன்னையே
பெற்றுவளர்த்தவன்னையே எந்தப்
போதும்வைதுவைது மோதுகிருப்பாவியன்னையே

தங்குநித்திலம்புரி யிங்கிதவலம்புரிச் சங்கமே
தென்றலுமொருசிங்கமே போலத்
தாங்கவேமயங்கி யேக்கமாமெலிந்தே னங்கமே

மங்கைமார்களந்தரங்கனோர்பவள வல்லியே
பிரியேனென்றுசொல்லியே போன
வாசக்கடம்பன்வாநேசத்துடன்சொல்லுமோபல்லியே

அங்கயத்திணிறை பங்கயத்துள்ளுறை யன்னமே
பிரியம்வைத்து முன்னமே கட்டி
யாதரித்தமுருகன்றனைக்காணேனே யின்னமே. 11

தலைவி ஊடல்.

ஆறுமுகவடிவேலவனேகலி பாணமுஞ்செய்யவில்லை சற்று
மச்சமில்லாமலேலைகைச்சாசத்துக் கழைக்கிறாய்யென்னதொல்லை
மீறியவன்பிலாதபெண்ணோடே விளம்பாதேவீன்பேச்சு சும்மா
வெள்ளைத்தனமாகதுள்ளுகிறாய்நெஞ்சில் வெட்கமெங்கேபோச்சு
மேட்டிமையென்னிடகாட்டுகிறாயினி வேறில்லையோஜோலி இதை
வீட்டினுள்ளார்கொஞ்சம்கேட்டுவிட்டாலது மெத்தமெத்தக்கேலி
தாஷ்டிகஞ்சேர்கழுகாசலமாநகர் தங்குமுருகோனே இந்திர
ஜாலத்தினாலென்னைகாலைப்பிடித்தாலும் சம்மதியேனானே
ஆத்திரகாரர்க்குபுத்திகொஞ்சமென்பா ராரும்பழமொழியே நீயும்
அப்படியென்னைப்பலாத்காரஞ்செய்ய லாச்சுதுபெண்பழியே
சக்கரைகட்டிபோல்வள்ளிதெய்வானை தையலுனக்கில்லையோ இரண்டு
தையலரைக்கோரும்பையலுனக்கென்ன தானுமொருநிலையோ
அம்புவியிற்சிறுபெண்களின்மேலுனக்காசையேன்காணுதையா நீர்
ஆக்கப்பொறுத்தாலுமாறப்பொறாதவர் ஆகவேதோணுதையா
நம்புமண்ணாமலைதாசன்புணியும் நளினமலர்ப்பாதா கொஞ்ச
நாளைக்குமேலொருஆசைக்கயற்கண்ணை நாட்டினாலாகாதா. 12

பாங்கி தலைவியின் நிலைமையைக் கூறித் தலைவனை யழைத்தல்.

கண்ணாயிரம்படைத்த விண்ணூரிடஞ்சரித்த
கனவயிரப்படை யவன்மகளைச்சாருக் கர்த்தனே திருக்
கழுகுமலைப்பதி யனுதினமுற்றிடு சுத்தனே
அண்ணாமலைக்கிடர்க ளண்ணாதொழித்துமிக
வசமகிழத்தன கருணையளித்திடு மையதனை திசை
யரவமும்வெட்குற மயிலைநடத்திய துய்யனே
மின்னோகமலமலர் பொன்னோவெனப்புகல
விகசிதரத்தின நகைசடாத்தொளிர் மெய்யினாள் கதிர்
விரவியசித்திர வளையலடுக்கிய கையினாள்
என்னோமுமனதி லுன்மீதிலேசிந்தைகொண்
டெழுதியசித்திர மௌனமவுனத்தினி லிருக்கிறாள் வண்ணத்
திடுகிறபுத்தமு தினையும்வெறுத்தற வருக்கிறாள்
கும்பத்தினைச்சினந்த அன்பைநினைத்தெழுந்து
கொடியிடைமுற்றிலு மொடியவளைத்தது அங்கையே மன்ன
குலவுகடப்பினில் நினைவதுவைத்தனள் மங்கையே

செம்பொற்சிலம்புகள் புலம்பப்பெருங்கெருவிற்
றிகழ்தருசிற்றில்கள் விரிவகைவிட்டவள் தியங்கினாள் உந்தன்
றிருவழைக்கரு விழியிளிருத்தியே மயங்கினாள்
போராடுதற்குறிய கூருர்மலர்கணைசெய்
புகழ்பெருசிததகச தனுவதனைப்பொரு புருவத்காள் தவம்
புரிபவரைத்தன தடியில்விழப்புரி பருவத்தாள்
சீராகநின்மனது பாராமுகமிலாது
திருவமுதக்கனி யிதழையமுக்கியே காரையா யிந்தத்
தெரிவையுளத்துனை வலதுபிடித்தவ ராரையா. 13

தலைவி பாங்கியரைத் தூதுவிடுத்தல்

பூமிமெச்சிடுமண் ணுமலைக்கோர் துணை யானவன்
மயில்வானவன் ஒரு கானவன் தினைப்
புனத்தைகாக்கும்வள்ளிவனத்தைப்பார்க்கமெள்ளப்போனவ

சோமமுற்றகமுகாசலேசனையே தேடுதே
மனம்வாடுதே கால்தள் ளாடுதே யிரு
செங்கைதங்கிநின்ற சங்கினங்கள்கழன் றோடுதே

தென்றலானபுலி வந்து கோபமொடு சீறுதே
தடுமாறுதே நிரங் கோறுதே மெத்த
தீமையாமிருளி லூறலாகிரி மீறுதே

குன்றமானபுஜம் ரண்டும்பூரிப்பைக் கொண்டுதே
திகழமண்டுதே வெப்பங் கண்டுதே மலர்க்
கொம்புபோலமென் மருங்குலானதுந் துவண்டுதே

உள்ளமெல்லமெல்ல முருகனென் றுநினைந் துருகுதே
முத்தங்கருகுதே கண்ணீர் பெருகுதே என்றன்
உச்சிக்கேறிதிபக்தி பித்தங்கிருகிறென் று வருகுதே

வள்ளமேவுபசும் பாலுந்தேனுமரு வருக்குதே
கசந்திருக்குதே துன்பம் பெருக்குதே வன்ன
வாருந்தாறுமாருச் சீறமேவதினமும் பருக்குதே

பாரமானசிந்தையோரவேடனம்பு பாயுதே
யுடல்தேயுதே மலர் தீயுதே கொடும்
பாவியானமதி யாவிசோரவந்து காயுதே

மாரவேளினால் கோரமானதொழில் வாதையே
யெனுந்தீதையே தீரத் தூதையே சொல்லி
வாட்டந்தீர்க்குகனைக் கூட்டிவாடியடி கோதையே. 14

பாங்கி தலைவியின் அவயவத்தருமை சாற்றல்.

சந்தவரை வந்தகுகநாதா பரை
யந்திர மனோன்மணியா பாகா மந்த்ர
சண்முகசட்டாடசர வினோதா
குழைக்காதா சூர்வாதா வன
சஞ்சரிவெண் குஞ்சரி சமேதா

செந்தமிழுண்ணுமலையை யாளாக் கொண்ட
கந்தவரவிந்தமலர்த் தாளா கட்க
சிந்திடிகடம்பணிந் தோளா
நெடுநாளா மறவாளா வுனைத்
தேடோற்குயிற்பேடுருவங் கேளா

சுந்தரமிகுந்தகுழகன் மேகம் அவள்
சொந்தநுதவிந்து விலோர் பாகம் திருந்
தும்புருவம்வில்லொடு சிநேகம்
தவயோகம் வென்றனேகம் வஞ்சந்
துஞ்சுவிழிகஞ்சினிலும் வேகம்

சந்தமலிகின்றமுக விந்து வள்ளைத்
தண்டுசெவியென்பதுவே தந்து கன்னம்
சாணைநுனிநாசியின் பசுந்து
மதுச்சிந்து தல்பொருந்து சிறு
சண்பகந்துப்பாமிகழ்ச்சி வந்து

செங்குமுதபுட்பமதை யொத்து மொழித்
தேனுலவும்வாய்நகையோ'முத்து கண்டஞ்
சிதாறுந்துவர நத்து
சொற்றித்தித்துப் பாகைக்கொத்து விடச்
செய்புமெனவுண்ணலா முளத்து

குங்குமவாகங்கசகோகண்டம் முன்கைக்
கோமகரயாழுவமை விண்டம் கையைக்
கோகனகமோவென மருண்டம்
ஆழிமண்டம்குலிக் கண்டம் நெருங்
குங்கெளிறுசிறுகெளித் துண்டம்

கட்டுகதிர் பட்டுமணி வம்பு கிழி
பட்டுவிருவிட்டிட வெழும்பு சிற
கட்டழகாம்வட்டபுட்டச் சொம்பு
பானைக்கொம்பு சிவசம்பு சூடங்
கைக்கும்வளையாத பொற்பறம்பு

வட்டமிழ்பசுந்துளப மாலே செங்கண்
வளருகிற தவிசெனுமோராலே சிறு
வயிறுமயிர் சிற்றெறும்பு போலே
விரைவாலே வெள்ளமேலே சுற்றி
வந்தகரு யுந்தியிடை நூலே

தரம்புகள்பெண்ணிக்கின்ன முண்டு துடை
தங்கநிறச் செங்கதலித்தண்டு முழந்
தாட்டுவமை கேட்கிலவைநண்டு
சினைகொண்டு வளர்பெண்டு வரால்
கணைக்காலெனுமி ரண்டு

பாடுதராகயர்குதிகந் துகமே யணி
பரவுபாவடியிணை புத்தமே கடற்
பவளமதி தசவிரல்கள் நகமே
யம்போருகமே பதயுகமே மயில்
பண்ணுமிளஞ் சாயலையா சகமே

மேனகையோ ர்வசியிந்த்ராணி சொல்ல
மிக்கதிரு முக்யகலை வாணி இந்த
மின்னரசி தன்னுருவங்காணி
நெஞ்சுநாணி மலர்ப்பாணி தலை
மீதுகுவித் தொழுவார்யேணி

சேனையொடு வந்துகருங் காவி யம்பைச்
செய்ய கருப்புச்சிலைவைத்தேவி சண்டைச்
செய்யுமொரு ரூபமிலான்பாவி
எங்கடேவி யிடமேவியுட லாவி தனைத்
தீர்க்குமுளங் காத்திடுவாய்மேவி. 15

தலைவன் வருத்தஞ் சாற்றல்

வண்ணத்தினைமாவைத் தெள்ளியே யுண்ணும்
வாழ்க்கைக் குரக்குல வள்ளியே யுயிர்
வாங்கப் பிறந்திட்ட கள்ளியே யிரு
வடமேருவைநிகராகிய புயமீதணிபலமாமணி
மாலைப்படிரெனத் துள்ளியே விழ
வான்மதி வீசுந்தீ யள்ளியே

கன்னத்தினிற் குயிற் சத்தமே பேட்டு
கன்றதுபாரென்றன் சித்தமே மயக்
கஞ்செய்யுதேயாசை பித்தமே யுடல்

கனலேறிய மெழுகாயின தினியாகிலு மடிபாதகி
கட்டாயம்நீயொரு முத்தமே தந்தால்
கைதொழுவேனுனே நித்தமே

வாடியிருப்பது வஞ்சமோ பொல்லா
வன்கருங்கலலோவுன் நெஞ்சமோ கொண்ட
மையற் பயித்தியங் கொஞ்சமோ சிலை

மதன்சோதரி யெனையாதரி மனவாழ்க்கையில் ஈனமாகிய
மார்க்கமுனக்கென்ன நஞ்சமோ ஒரு
வார்த்தையுரைக்கவும் பஞ்சமோ

தேடக்கிடையாத சொர்னமே உயிர்
சித்திரமேமட வர்னமே அதோ
சிக்குது பால்தயி ரன்னமே பொரு

சிலைவேற்குற மகளாகுநின் கயலால்விழி யெனையேதுயர்
செய்வது கண்டிலை யின்னமே என்ன
செய்தேனோ தான்பழி முன்னமே. 16

தலைவனைக்கலந்த தலைவி பாங்கிக்குக் கூறல்.

செந்தின்மாநக ரந்தனில் மேவிய
தேசிகனுமுருகேசன் மயில்
வாசியிலேறுமுல்லாசன் சிறு

திங்களும்பண மங்கமாசுண முந்துலங்கிய கங்கையாரொடு
செஞ்சடாடவி மீதணிவார்செவி
சேரன்முன்னோறுபகேசன் அடி
யார்தமையாள் விசுவாசன்

எந்தநேரமும் வந்தனைசெய்தடி
எண்ணும் அண்ணுமலை தாசன் துதி
பண்ணும் மெஞ்ஞானவிலாசன் என்னே

டிருங்தெழுந்து தயங்குமாலையில் வந்துவண்டுமுழங்குசோலையி
லின்பசாகரமாகியநாடக
டின்புடனேசெய்தான்மானே அந்தச்
சம்ப்ரமென்ன சொல்வேனே

மங்கைமார்பலருள் புடைசூழ்தர
மாமாலர்கொய்திடச் சென்றேன் அங்கோர்
பூமரத்தே தனிநின்றேன் சந்த்ர
மண்டலங்களை வென்றவாகன
மைந்தோடொன்று மிருந்துவார்மது
வண்டலோடு கடம்பெனுமாரமும்
வாமுந்தோன்றிடச் சேர்ந்தான் என்
சீரைப்பார்த்தே களி கூர்ந்தான்

பங்கையாசன மேலுறைநான்முகப்
பரதகனுமலர்க் கைதான் கொண்டுன்
சோதியை யெப்படிச்செய்தான் அடி
பஞ்சுராஞ்சினு மஞ்சுசீரடி
கொஞ்சுராஞ்சித வஞ்சியேபுவி
மாட்டு நீநிற்க வேண்ணுதென்று
பண்மலர்மெத்தை யொன்றிட்டான் பின்பு
மென்மலரேந்தன் கைதொட்டான். 17

வாவி வளம்.

வேறு.

கன்னல்சூழ்பல னம்புடை சூழ்கழு
கர்சலந்தனில் வாழ்பிரதாபனே கன
வாசமெங்கும் கமழ்கின்றநீபனே வள
காதலோடிரு போதிதும்பல
மோதினார்பணி வார்மனத்துறை
காமிருட்குவை நீங்கியதீபனே அதி
சூரபத்மனைத் தாங்கியகோபனே

சென்னிமாநகர் வாழுமண்ணுமலே
செப்புஞ் செந்தமிழுக்கதிரோசனே சிவ
சுப்ரமண்யனென்னும் பிரகாசனே கொடுஞ்
சிந்தைநைந்து புலம்பிநின்றிரு
மந்திரந்தனில் வந்தடைந்துனே
சேவிக்குங்குண மென்றனக்காகுமோ மிரு
பாவிக்குத் துயரெப்படி போகுமோ

வந்தவர்க்குப் பழம்புளிக்காடியே
தந்திடச்சனியார்தமைத் தேடியே பிர
பந்தமெத்தனை யெத்தனைகோடியே யிள

வாழையின் பழமோகனிந்திடு
மாழையின்கனி யோவெனும்படி
மதரிதம்யேறவே ரிதம்பாடியே யொரு
பரிசும்பெருதுளம் வாடியே
வெந்தரைக்குள் வெடிப்பிடைபாலையே
சிந்துபித்தரைப்போல் வெறும்வேலையே செய்யும்
வீணனவிளங்குன்றண்டைக் காலையே எந்த
வேளையுந்துதி கூறவுந்துயர்
நீளுவெம்பவ மாதவம்புரி
வில்வவேணிசேர் கற்பகவாலையே தரு
செல்வனேயெனுங் கற்பகச்சோலையே. 18

தலைவியின் ஊடல்

செந்தூர் வளர்முருக நாதா அருணோதயம்
செந்தாமரை நிகழும் பாதா உன்
சிந்தையி லண்ணமலை செய்
நிந்தையை யெண்ணு தருள்செய்
சித்திரவேற்கர விநோதா உனதுவஞ்ச
செய்கை யின்னமுந் தெரியாதா
சந்தோஷமாகவே போய்வீடு வீடுதோறுஞ்
சரசங்கொண்டாடுவதே பாடு வந்துன்
றன்னுடனே சேர்பிரியக்
கன்னியர்கள் பேர்வரியக்
சாஸ்திரம்வேணுமோ வெள்ளேடு தனித்தோரிடங்
தயங்கியேமேயுமே வெள்ளாடு
வேசையர் வாசலிலே சென்று தம்பலங்களை
வெட்கமில்லாமல் வாங்கிமென்று தின்று
மெத்தப்பயித்தியங்கொண்டு
சுற்றித்திரிந்தே மருண்டு
வீடுதேடிவந்தாயே யின்று தொடவேமாட்டேன்
வேணுமென்றுலு போடுகொன்று
ஆசைகொண்டவருக்கு ரோஷங் கிடையாதென்பார்
அப்படிக்காகில் விசுவாசம் வைக்கும்
அந்தவிலைப் பெண்டுகளைச்
சொந்தமெனக் கொண்டனையே
யானுமுன்னைப்போலே மோசம் போனவருண்டோ
ஆருஞ்செய்கிறுரே பரிகாசம்
கந்தர்செய்யாதே பலவந்தம் புதுமலரைக்
கசக்கியறிவார்களோ கந்தம் சற்றுக்

காதலிலாமற் சினந்தார்
கையை வலியப்பிடித்திக்
கசக்கிறைலாமோ சுகாநந்தம் உனக்கெங்கும்
கனவிலுமில்லையினி தொந்தம்
எந்தப்பிறப்பினுமே வல்லி யுனையல்லாமல்
எவளையும் பாரேனென்று சொல்லி
எத்தனை பரத்தையரோ
நித்தமுநீ நத்தினையோ
இப்படிக்காசிகாஞ்சி டில்லி கன்யாகுமரி
எங்குபார்த்தாலுமில்லை சல்லி
கந்துகரை இல்லையேஜாடை சொல்லி வைபவர்
கட்டுகுருயே பெதற்காடை மானங்
காக்கவல்லவா வென்பாலே
சேர்க்கையிலாதே யன்பாலே
காத்தாயே வேசைமாதர்மேடை கைவசமாமோ
கலப்புல்லுந்தின்றாலுமே காடை
குங்குமஞ் சந்தனஞ்சவ்வாது கதம்பஞ்
குமுகுமென்றே புயத்தின் மீது வாசம்
கொட்டுதழி வெற்றிசங்கப்
பொட்டொடு பகட்டுதிந்த
கோகிலம்புதிதாய் வந்ததேது நடந்ததெல்லாங்
கொஞ்சஞ்சொல்வாய் பண்ணாதே சூது

தலைவி வருந்தல்

பாளைவாய்கமுகில்வந்து வாளைபாய்வயல்சூழ்செந்தூர்
பாலனம்புரியவந்த புண்ணியா எந்த
காலையுஞ்செய்கிறாய்முன்பின் னெண்ணியா
வேளையோவிடிந்துதையா நாளைவாரேனென்று கையை
விட்டிடென்றாலும் விடாமற்பிடிக்கிறாய் பாலே
யொட்டவேமடுவரிந்து குடிக்கிறாய்
நித்தமு மண்ணுமலைசெய் குற்றமென்ன வேலாகண்டோர்
நின்னிதழ் பவளங்களில் வெள்ளையே தென்று
லென்ன சொல்வே னொருபெண்பிள்ளையே
மத்தநிகர் புயத்தின்மேலே மெத்தகா வாசைப்பட்டு
மாலைப்பிறை போலவொளி தோணுதே இதை
கேலித்துரை யாகுமென்று காணுதே
உன்னையும் விவாகமில்லா வென்னையுமே யன்னைகண்...
லொன்றுஞ் சொல்லிடாளோ அடாபாவிடே பில...

தின்றிடுனேனென்பாள் பச்சைநாவியே
சன்னல்சாண்டை யாகவெங்தென் றன்னைகண்டு போவீரென்று
சாற்றிடுவே னுண்மையான சொல்லையே வீட்டுக்
கூற்றுவன்போல் வந்தாயென்ன தொல்லையே
சாருசேர்கரும்புருசி யாயிருந்தாலும்வேரோடு
தான்பரித்துத் தின்னுவது ஞாயமோ முழு
ஆண்பிள்ளைக் கிதுதான் சம்ப்ரதாயமோ
நூறுநாராயிரந்தரம் மாறிமாறியேபிறந்து
நோகுதே எந்தனுடைய வுள்ளமே சித்தம்
போகுதே பலவாய் கள்ளமே. 20

நற்றாய் தலைமகளின் வேற்றுமைகண்டு வினவுதல்

என்னடி நான்பெற்றமங்கை இளநங்கை வுடல்சங்கை என்ன
யிப்படியாயிற்றேசெங்கை வளை
இடற்பெற்றிட வுடைபட்டன நடைகெட்டதுன் னுடையிற்பல
வெய்தன சந்தனப்புள்ளி என்ன
செய்தாயோ சொல்லடிகள்ளி
அன்னவயல் செந்தூர்வாசன் மந்தகாசன் அன்பர்நேசன் நாளும்
அண்ணாமலைக்கவிராசன் பாடும்
அமுதச்சுவை தருமுத்தமிழ் களபத்தொடு கமழ்பொற்புய
அற்புதவேலவன் செய்ஜாலம் தன்னால்
கற்பழிந்தாயோ விக்காலம்
சித்தசன்மெச்சிடுநூலை யந்திமாலை யொடுகாலை வைத்துத்
சிந்திப்பதாச்சுதுன் வேலை அவள்
சின்னத்தனமாவஞ்சியே யுன்னைப்பணிவொடு கெஞ்சியே
சேவற்கொடியோன் பூஞ்சோலை தனில்
தேடியே வந்திட்டானோமாலை
மெத்தப்பிரமை கொண்டேங்கி மனமேங்கி நேசப்பாங்கி மாரை
விட்டுத்தனியாக நீங்கி வடி
வேலுக்கதிபதி எண்ணியே மேவிட்டலறிய கன்னியே
வெட்கத்தை போக்கடித்தாயோ யிரு
வேசைத்தனம் படித்தாயோ
இன்னம்விவாகமேஇல்லை கமழ் கொல்லை வெடிமுல்லை சூழ
வெங்குஞ் சிங்காரித்து மில்லை சந்த
மினிதாகிய களபந்தனை கனமேருவி லணிகின்றனை.
இப்படியே தலைவிதியோ பெண்ணே
செப்படியோ யிதுமதியோ
சன்னதமாகுமோர் பேயே பிடித்தாயே வேப்பங்காயே போலச்
சாதம்வெறுத்தாயே நீயே பெருஞ்

சண்டாளியே கண்டோதிரள் கொண்டேபழி விண்டார் கம
சாதிக்கெல்லாமொரு வடிவே வாத்
தானபிறந்தாய்வந்து நடுவே
வண்ணப்பைரவிதோடி ராகம்பாடி யுறவாடி யுன்முன்
வந்துதினம் விளையாடி எங்கும்
வசைமேவிடும் வகைசெய்கன னகுமுகினி மிகவேயுயர்
வையகத்திலிது வறியா அந்த
வாலைமானுக்கும வெறியா
எண்ணங்குமரவேள் பாலே சென்றதாலே யினிகேளே பழி
எப்படியுமுன்றன் மேலே வரு
மென்றேயென துளமஞ்சுது நன்றேசொல் லெனவஞ்சக
மில்லைக்கிழவன்சொல் வீணைக் காரர்க்
கேற்காதென் றுலுங்கண் ணுணே 21

தலைவனிடத்து தலைவி வருந்துதல்.

வேறு

மஞ்சுநிகர்குந்தளமின்னே சததளங்கள் விகசிதஞ்செய்
வாரிசாதனத்தில் வாழ்பொன்னே செய்ய
வன்னமேயொளிர் சொர்ணமேநடை
யன்னமேயிடை பின்னமேபெற
வந்தகளபாரவஞ்சியே அதிவிருப்பத் துடனுரைக்கும்
வார்த்தையைக்கே ளாசைமிஞ்சியே
அஞ்சுவயதானபருவம் தனிலெனது சிறுமனமுன்
அங்கஜவேள் போலேவுருவம் பெற்றே
அன்றுவந்து நயந்துமாலையி னெஞ்சழிந்து மயங்கவேபுரி
ஆறுமுக வேலவனையே
நினைவுகொண்டே மதிமருண்டே
ஆறுதில்லை யென்னவினையே
சென்னிகுளமேவியவாசன் இனியதுதி யனுதினமுஞ்
செய்திடும் அண்ணாமலைதாசன் பாடுஞ்
சிந்துமீது மிகுந்தநேயமு றுஞ்சுசீலகு வஞ்சமோருக
திவ்யமுகங்களாறுமே
கண்களிற்கண்டால் துன்பங்களெல்லாம்
காதவழியோடிப்போகுமே. 22

அண்ணாமலைரெட்டியார் இயற்றியகாவடிச்சிந்து முற்றிற்று.

திருப்புகழ் குப்புசாமி முதலியார் பாடிவருகின்ற

வேறு சந்தம்.

வங்கசரமார்பிலணி தாரொடியாகோடைசைய
சொந்தாரைமாலைகுழ லாரமொ டுகோள்புரள
வங்காதிலோலைகதிர் போலஒளிவீசயிதழ் மலர்போல

மஞ்சாடுஞ்சாபநுதல் வாளனையவேல்விழிகள்
கொஞ்சாரமோககிளி யாகநகைபேசியுற
வந்தாரைவாருமிரு நீருறவேணுசைமையல் விடுமாதர்
சங்காளர்சூதுகொலை காரர்குடிகேடர்சுழற்
சிங்காரதோளர்பணி ஆசையுளர்சாதியிலர்
சண்டாளர்சீச்சிபவர் மையவலையோட்டியே ஊழலாமல்
சங்கோதைநாகமொடு கூடிவெதுமாயையிருள்
வெங்கோடமூலஅழல் வீசவுபதேசமது
தணகாதிலோ தியிரு பாதமலர்சேர அருள் புரிவாயே
சிங்காரரூபமயில் வாகனநமோநமென
கந்தாகுமாரசிவ தேசிகாநமோநமென
சிந்தூரபார்வதி சுதாகாநமோநமென விருகோதை
சிந்தாண்சோதிகதிர் வேலவநமோநமென
கங்காளவேணிகுரு வானவநமோநமென
திண்சூரராழுமலை தூள்படவேலைவிடு முருகோனே
இங்கிதவேதபுர டிவைவிழமோதியொரு
பெண்காதலோடுவன மேவிவள்ளிநாயகியை
இன்பானதேனிரச மாரமுலைவிடாதகர மணிமார்பா
எண்டோளர்காசல்கொடு சாதல்கறியேபருகு
செங்காடுமேவிபிர காசமாயிலமேலழகோ
டெங்காகல்மாலைமுடி ஆறுமுகவாவமரர் பெருமாளே

பஞ்சரத்தினத் திருப்புகழ்.

மலடிவயிற்றுமகன்போலேயொ புதையலெடுத்ததனம்போலே ஒளி
வயிரமடித்த களம்போலேயிள முலைமாதர்
வலியவணைந்த சுகம்போலே கதிரொளிவிடுரத்ன வடம்போலேபரி
மளமிகுபுட்பவனம்போலே சுர நதிபோலே
அலைகடல்பெற்றிடுபெண்போலேவருபுலவர்தமக்கிருகண்போ கனை
யருகிலடுத்தசலம்போலே புன தழகாமோ
அமுதபுசித்தரசம்போலேதிரை கடன்மடைவிட்ட சலம்போ தின
மதிசயமுந்தரி மூன்பாலோதநின் னருள்தாராய்
கலகலனச்சொல் சிலம்பாசீர்பெறு மலைகள்பெற்ற குழந்தாய்மாமத
கரிமுகனுக்கொரு தம்பீகானவர் மகளாமோர்
கடிமலர்மொய்க்கசுரும்பேஞானிகண்மன துருசித்தகரும்பே வான
கவலைதனித்தொரு என்பேமாயவன் மருகோனே
குலிசன்மகட்கொருநண்பாவேழிசையூளிகள்சுவைத்தகடம் போய்
குரைகட லுக்கொரு சம்பானைவரும் வடிவேலா
கொடியபிணிக்குமருந்தேதாள்பணிபமரர்தனக்குவிருந்தேகோதை
குருகுருடத்தாந் தாரங்காவோக முருகோனே

...ந்துச்சொரிந்ததோகொதி பாலுடனெக்கக் கலந்ததோ நல
...ரியிவிட்டுப் பிசைந்ததோபல சனிதாமோ
...படுத்துப்பிழிந்ததோநிறைபாகுபதத்திற்சமைந்ததோ விலைவ
சோவுருட்டத் திரண்டதோநவ ரசமீதே
ஞானமுளைத்துப்படர்ந்ததோவதி லேயெழுபுட்பச்சுகந்ததோ மறை
நாமகள்வித்தைப்ரசங்கமோவென வுறைநாவல்
நாவலர்மெச்சிப்பணிந்து தாழவுநீயெனைமெச்சிக்கனிந்துபேசவு
நானுனைமெச்சிப் புகழ்ந்துபாடவு மருள்தாரய்
யானைமதப்பட்டெழுந்ததாமென வேயிருபத்மச்சதங்கையோலிட
வாறுமுகத்துக் குழந்தையாயரு ளனைமார்பா
ஆறுமுலைச்செப்பரிந்துபாலுட னறுமலைக்குட்சொரிந்தவாறென
வாறுமுலைக்குச் சிறந்தபாலதி லமையாதோ
சோனைமலைக்கொத்திரிந்துலாவருக்ஷீரசமுத்ரத்தரங்கமேலெழு
சூரியனெக்கத்திரிந்துலாவிய புதல்வோனே
சோலைமலைக்குக்கடம்புபோல விராலிமலைக்குக்கொழுந்துபோலுயர்
சுவாமிமலைக்குக் கடம்புபோல்வரு முருகோனே
கலியையசைத்துத்துலைத்துவிட்டொரு பிணியையடித்துதாத்திவிட்
டெழுகவலைநெருப்பை தணித்துவிட்டற நெறியாலே
கடினகசப்புக்கினிப்புவிட்டென துயரிலழுக்கைதுடைத்து விட்டொ
கருணைமழைக்கு ளிகைவிட்டினி யலையாதே
அலையுமனத்தைபிடித்துவைத்ததீலுறையுமிருட்டுகருக்வைத்தெனை
யடிமைவைக்கப கருத்துமுற்றிலும் நினையாயோ
மலைகள்பயப்பட்டொளிப்பதற்கொருபுகலிடமற்றுதவித்து நிற்கவும்
வடவரைமிக்குச் சலித்திருக்கவு மதனுலே
குலவரைவிட்டுத்திசைக்களிற்றினையுடலைமிதித்துகிழித்ததிற்சொறி
குருதிகுடித்துப் பெருத்தசெப்பிள முலையாளோர்
குறமகளைக்கைப்பிடித்துமற்றொருதுரைமகளைக்கைப்பிடித்து மிக்கு
குலகிரியைக்கைப் பிடித்திருக்குமெம் முருகோனே.

பஞ்சரத்தினத் திருப்புகழ் முற்றிற்று

பார்வதி ஜெகன்மோகன தி. குப்புசாமி முதலியார் பாடிவருகிற

திருப்புகழ் வேறுசந்தம்.

இசைந்தசூலம் கரியுரிபோர்வையும் எழில்நீறும்
இலங்குநூலும் புலியுடையாடையும் மழுமானும்
அசைந்ததோளும் திங்களுமாலையு முடிமீதே
அணிந்தயீசன் பரிவுடனருளிய குருநாதா
உகந்தசூரன் கிளையுடன்வேறற முனிவோனே
உகந்தபாசக் கயிறொடுதூதர்கண் மெலியாதே
அசைந்தபோதென் றுயர்கெடமயின்மிசை வரவேணும்
அமைந்தவேலும் புயமிசைமேவிய பெருமாளே.

மேற்படியார்பாடிவருகிற சந்தம்.

கருவினுருவாகிவந்து வயதளவிலேவளர்ந்து
கலைகள்மேலவேதெரிந்து மதனலே
கரியகுழல்மாதர்தங்க ளடிசுவடிமார்புதைந்து
கவலைபெரிதாகிநொந்து மிகவாடி
அரகரசிவாயவென்று தினமுநினையாமல்நின்று
மறுசமயநீதியொன்று மறியாமல்
அசனமிடுவார்கள் தங்கள் மனைகள்தலைவாசல்நின்று
அனுதினமுநாணமின்றி யழிவேனே
உரகபடமேல்வளர்ந்த பெரியபெருமாளரங்க
ருலகளவுமான்மகிழ்ந்த மருகோனே
உபகுலதீபதுங்க விருதுகவிராஜசிங்க
உறைபுகலியூரிலன்று வருவோனே
பரைமனைமீதிலன்று ஒருபொழுதுதாதுசென்ற
பரமனருளாலமர்ந்த குமரேசா
பகையசுரர்சேனைகொன்று அமரர்சிறைமீளவென்று
பழனிமலைமீதில்நின்ற பெருமாளே

வேறு

மருவேசெறித்த குழலார்மயக்கின்
மதனகமத்தின் விரகாலே
மயலேயெழுப்பி யிதழேயருத்தி
மலைநேர்முலைக்கு ளுறவாகி
பெருகாதலுற்ற தமியேனைநித்தம்
பிரியாதபட்ச முடனேயென்
பிழையேபொருத்து னிருதாளிலுற்ற
பெருவாழ்பற்ற வருள்வாயே
குருவாயரற்கு முபதேசம்வைத்த
குகனேகுறத்தி மணவாளா
குளிர்கான்மிகுத்த வளர்போதமுற்ற
குடகாவிரிக்கி வடபால்வாழ்
திருமால்தனக்கு மருகாவுமைக்கோர்
சிறுவாகரிக்கு மிளையோனே
திருவேரகத்தி லுறைவாயரக்கர்
சிரமேதுணித்த பெருமாளே.

சுப்பிரமணியர் காவடிச்சிந்து

முற்றிற்று.

உ

விளம்பரம்.

ஸ்ரீமான் மாம்பழக் கவிச்சிங்கநாவலரவர்கள் சகோதரர் குமாரர் மகா-ா-ா-ஸ்ரீ M. R. S. வேல்சாமிக்கவிராயர் அவர்கள் இயற்றிய தண்டபாணித் தெய்வ ரஞ்சித மெனும் பக்திரஸக் கீர்த்தனம்.

முதற்பாகம் ... விலே ரூ. 0—5—0
இரண்டாம்பாகம் ... ... 0—5—0

செட்டிநகர் வித்வான் இராமசாமிக் கவிராயர் அவர்கள் இயற்றிய பக்திரஸக் கீதாமிர்தம் ... . 0—4—0

சோழவந்தான் ஸ்ரீமான் அரசன் சண்முகனார் மருகர் சோமசுந்தம்பிள்ளை என்ற கவிக்குஞ்சர பாஷியம் அவர்கள் இயற்றிய பக்திரஸக் கீர்த்தனம்... ... 0—4—0

உத்தமபாளையம் டிராமா உபாத்தியாயர் U. P காமாக்ஷியாபிள்ளை யவர்களியற்றிய விநோத பரமாநந்தக் கீர்த்தனை ... ... 0—5—0

மதுரை, சபாரஞ்சித R. V. சத்திவேலாச்சாரியர் இயற்றிய குமரபஜனமிர்தம்(புதிதாகவெளிவந்தது) 0—5—0

கன்னிஜமீன் சரபம் மகா—ா—ா—ஸ்ரீ
உடுமலே முத்துசாமிக் கவிராயரவர்கள்
மாணக்கர் R. K. பூமி பாலக தாஸ் இயற்றிய
பாசுரசேகர மெனும் பக்திரஸச் கீர்த்தனங்கள்

முதற்பாகம் ... ... விலே ரூ. 0—5—0
இரண்டாம்பாகம் ... ... 0—5—0

மு. கிருஷ்ணபிள்ளை,
பி. நா. சி. ஏஜண்டு,
புக்ஷாப், மதுரை.